**செய்தி வெளியீடு எண்: 106** **நாள்: 30–01–2012.**

**செய்தி வெளியீடு (30.01.2012)**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் தலைமையில், வருவாய்த்துறை, நிலநிருவாகம், நிலசீர்திருத்தம், நிலஅளவை மற்றும் நில பதிவேடுகள், நகர்புற நிலஉச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரி ஆகிய துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றியும் மற்றும் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு பணிகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு,ரமேஷ்ராம்மிஷ்ரா, இ.ஆ.ப., முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., நில நிலசீர்திருத்த முதன்மை ஆணையர் திருமதி. ஜெயஸ்ரீரகுநந்தன்,இ.ஆ.ப., சுனாமி மேலாண்மைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர்,திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நகர்புற நில உச்சவரம்பு ஆணையர் திரு. எஸ்.முருகையா, இ.ஆ.ப.,பேரிடர் மேலாண்மை இணை ஆணையர் திரு.ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமையுரையாற்றிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் வருவாய்த்துறையானது மிகவும் முதன்மையானதும் முன்னோடியான துறையாகும். ஏழை எளிய மற்றும் அடித்தள மக்களின் நலன்களை போற்றிப் பேணிடும் வகையில் பல்வேறு நல திட்டங்கள் இத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருவது பெருமைக்குரியது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, மாநிலம் முழுதும் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ள புதிய விரைவுப் பட்டா மாறுதல் திட்டத்தின் பயனாக, மாநிலம் முழுதும் நாளதுவரையில் ஏறத்தாழ, 12 இலட்சம் மனுக்களின் மீதான இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தமிழக வருவாய்த்துறையின் வரலாற்றில் இது வரையில் நிகழ்த்தப்படாத சாதனையாகும்.

மேலும், 10ஆம் வகுப்பு பள்ளி மாணவ மாணவியர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான வகுப்புச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ் மற்றும் வருமானவரிச் சான்றிதழ் ஆகியவற்றை தாம் பயிலும் பள்ளியிலேயே பெற்றிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் நாளது வரையில், 5.36 இலட்சம் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய உழவர் பாதுகாப்புத்திட்டம், முதியோர் ஓய்வூதியம் வழங்கிடும் திட்டம் போன்ற சமுக பாதுகாப்புத் திட்டங்கள், வருவாய்த்துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புதல், மற்றும் அண்மையில் தானே புயலினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, வழங்கப்பட்டுள்ள நிவாரண உதவிகள் மற்றும் சீரமைப்புப்பணிகள் குறித்தும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**